## இணை ஆணையர் (மா.வ.), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு,சென்னை-08 அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை : திருமதி. தி.சாருஸ்ரீ, இ.ஆ.ப.,

இடம் : 5வது தளம், துகார் டவர்ஸ், எண். 34, மார்ஷல்ஸ் சாலை, சென்னை -8.

************************************************************************************************

செ.மு. ந.க.எண் : 443209/2020/அ2 நாள் : 09.06.2020

பொருள் : பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - அதிக வரிசெலுத்துவோர் பிரிவு, சென்னை-8 - தமிழ்நாடு அமைச்சுப் பணி - 2017-2018 தொகுதி - IV தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தட்டச்சர் திரு.சு.பாலமுருகன் - பணி மாறுதலின் பொருட்டு இணை ஆணையர் (மா.வ.), அதிக வரிசெலுத்துவோர் பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிவரன் முறை செய்து ஆணை வழங்கல் - தொடர்பாக.

பார்வை :
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடித எண். 1699/PSD-A/2019, நாள். 18.02.2019.
2) இணை ஆணையர் (மா.வ.), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை-6 அவர்களின் செ.மு.ந.க. 1612/2017/அ2-l, நாள். 25.02.2019.
3) இணை ஆணையர் (மா.வ.), சென்னை (கிழக்கு) கோட்டம், சென்னை-6 அவர்களின் செ.மு.ந.க. 2542/2019/அ2, நாள். 06.03.2019.
4) இணை ஆணையர் (மா.வ.). சென்னை (கிழக்கு) கோட்டம், சென்னை-6 அவர்களின் செ.மு.ந.க. 10532/2019/அ2, நாள். 01.10.2019.
5) இணை ஆணையர் (மா.வ.), அதிக வரி செலுத்துவோர் பிரிவு சென்னை-8 அவர்களின் செ.மு.ந.க. 247794/2019/அ2, நாள். 21.10.2019.
6) அரசு ஆணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்.22.07.2008.

******

ஆணை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2017-2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற தொகுதி-IV தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, தட்டச்சராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணி நியமனம் செய்யும் பொருட்டு பார்வை 1-ல் காணும் கடிதக்குறிப்பின் மூலம் இணை ஆணையர் (மா.வ.), சென்னை (தெற்கு) கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்னர் பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இணை ஆணையர் (மா.வ.), சென்னை (கிழக்கு) கோட்டத்திற்கு மறுஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி உதவி ஆணையர் (மா.வ.), பம்மல் வரிவிதிப்பு வட்ட அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 4-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இணை ஆணையர் (மா.வ.), அதிக வரிசெலுத்துவோர் பிரிவிற்கு தட்டச்சராக பணி மாறுதலின் பொருட்டு ஒதுக்கீடு

செய்யப்பட்டு, பார்வை 5-ல் காணும் செயல்முறை ஆணையின்படி தட்டச்சராக 01.11.2019 முற்பகல் முதல் இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு.சு.பாலமுருகன் என்பவருக்கு, பணியில் சேர்ந்த நாளான 13.03.2019 முற்பகல் முதல், பார்வை (2) மற்றும் (3) இல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தனியாளருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

> **"The regularization is subject to the outcome of the WPs relating to Group-IV services 2013 - 2014 and 2014 - 2015 recruitment pending on the files of the Hon' ble High Court of Madras / Madurai Bench of the Hon' ble High Court of Madras".**

2. தனியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவகாலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

3. தகுதிகாண் பருவத்தில் தனியாளர் துறைத் தேர்வான தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (Tamil Nadu Government Office Manual) மற்றும் பார்வை-6ல் காணும் அரசாணையின்படி தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் கணினி வழி அலுவலக தன்னியக்கமுறை (Computer on Office Automation) ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

ஒம்./- தி.சாருஸ்ரீ
இணை ஆணையர் (மா.வ.),
அதிக வரி செலுத்துவோர் பிரிவு,
சென்னை-8.

பெறுநர்
திரு. சு.பாலமுருகன்,
தட்டச்சர்,
இணை ஆணையர் (மா.வ.), அதிக வரிசெலுத்துவோர் பிரிவு, சென்னை - 8.

நகல் :

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 3.
2. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6.
3. இணை ஆணையர் (வவ), சென்னை (கிழக்கு) கோட்டம், சென்னை - 6.
4. இவ்வலுவலக அ2 உதவியாளர்.
5. ப.உ. கட்டு.
6. உதிரி.

// உண்மை நகல் //

உதவி ஆணையர் (மா.வ.) / 9/6/20
இணை ஆணையர் (மா.வ.) அவர்களின்
நேர்முக உதவியாளர் (மு.கூ.பொ.),
அதிக வரிசெலுத்துவோர் பிரிவு,
சென்னை-8.